

ஸ்ரீ:

திருவரங்கம்

# ஆலய தத்துவ விளக்கம்

சித்தர்கள் முறை

ஆக்கியோன்:

பிரம்மஸ்ரீ ரா. பாலசுப்பிரமணியம்,
6, தெற்கு தேவி தெரு,
ஸ்ரீரங்கம், திருச்சி-620 006.

உரிமை ஆசிரியருக்குரியது.

விலை ரூ. 2-00

# ஸ்ரீரங்கம் கோயில் அமைப்பு தத்துவ விளக்கம்.

## சித்தர்கள் முறை

காவிரி நதியின் பிறப்பிடம் குடகுமலை. திருச்சி சமீபம் இது முக்கொம்பில் இரண்டாகப் பிரிகிறது. மீண்டும் கல்லணையில் ஒன்றாகச் சேர்கிறது. கல்லணையிலிருந்து மீண்டும் ஐந்து கிளை நதிகளாகப் பிரிந்து பல பெயர்களைக்கொண்டுக் காவிரி நதி ஓடிக்கொண்டிருக்கிறது. மேற்கிலும் கிழக்கிலும் பத்து மைல் சம தூரமாக உள்ள இத்தீவில் ஸ்ரீரங்கம் அமைந்துள்ளது.

**தத்துவ விளக்கம்:** குடகுமலை பிர்ம்ம நிலையைக் குறிக்கும். பிர்ம்ம நிலை ஒன்றே. முக்கொம்பில் மூன்றாகப் பிரிவது இடகலை, பிங்கலை நாடிகள், சுசும்னா இடையில் தீவு சுழி முனை. கல்லணையிலிருந்து ஐந்தாகப் பிரிவது ஞானேந்திரியங்கள் ஐந்து. இவை நம்மைக் கீழ்நோக்கிச் செலுத்துவதால் ஆற்றோடு போகாது நாம் எதிர் நீச்சலிட்டு மேல்நோக்கிச் சென்று பிர்மத்துடன் கலக்க வேண்டிய முறையைத் திருவரங்கம் கோயில் அமைப்பு விளக்குகிறது.

**அம்மாமண்டபம் அமைப்பு:** அம்மாமண்டபத்திலிருந்து முதலில் அமைந்துள்ளது புலி மண்டபம். பதினாறு தூண்களை உடையது. இது பதினாறு கலைகள் கொண்ட சந்திர கலையைக் குறிக்கிறது. அடுத்து இராய கோபுரம்வரை நான்கு தூண்கள் உள்ள மண்டபங்கள் மூன்று உள்ளன. மொத்தம் பன்னிரண்டு தூண்கள் இருப்பது சூரிய கலையைக் குறிக்கும். இராயகோபுரம் சமீபம் மேலும் பதினாறு தூண்கள் உள்ள மண்டபம் ஒன்று உள்ளது. இது சந்திர கலையைக் குறிக்கிறது.

கோபுரங்கள் நான்கு. இராய கோபுரம் முதல் நான்முக கோபுரம், கட்டைக்கோபுரம், ஸ்ரீரெங்கா கோபுரம் முடிய நான்கு கோபுரங்கள் உள்ளன.

கோபுரங்கள் விபரம். 1. இராயகோபுரம், இதைக் கடந்ததும் ஒரு நான்கு தூண்கள் உள்ள மண்டபம் உள்ளது.

2

2. காய்கறிக்கடைக் கோபுரம். இதைக் கடந்ததும் சித்திரை வீதியை ஒட்டி ஓர் நான்கு தூண்கள் உள்ள மண்டபத்தில் பாதாளக் கிருஷ்ணன் இருக்கிறார். இவர் பூமி மட்டத்துக்குக் கீழே உள்ளார். குண்டலினி சக்தியைக் கீழ் இருந்து மேலே கொண்டு செல்லவேண்டும் என்பதை இது குறிக்கிறது. இவ்விரு மண்டபங்களுக்கும் மொத்தம் எட்டுத் தூண்கள் உள்ளன. நம் சுவாசம் எட்டு அங்குலம் உடலில் சேர்வதைக் குறிக்கும்.

3. கட்டைக் கோபுரம்.

4. நான்முக வாசல். இந்த இராய கோர்புரம் முதல் நான்முகக் கோபுர நுழை வாசல் வரையில் நான்கு கோபுரங்கள். இவை வெளியே அதிகமாகச் செல்லும் நான்கு அங்குலக் காற்றையும் யோகாப்பியாசம் மூலமாக நம் உடலுக்குள்ளேயே நிறுத்த வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இக்கோயிலுக்கு இராய கோபுரம் முதல் நாழிகைக் கேட்டான் வ ா ச ல் வ ரை ஏழு கோபுரங்கள் உள்ளன. இவை ஆறு நிலைகளையும், அவைகளைக் கடந்து ஏழாவது நிலையில் பரமாத்மா உள்ளார் என்பதையும் குறிக்கும்.

முதல் ஆதாரம். மூலாதாரம், கோயிலுக்குள் நுழைந்ததும் உள்ளது நாதமுனிகள் சந்நிதி. இதன் தத்துவம் நாதத்தைப் பற்றவேண்டும் என்பதாகும்.

ஸ்ரீ ரெங்க விலாச மண்டபத்தின் மேலே உள்ள சிற்பங்களின் **விளக்கம்.**

1. லெக்ஷ்மி நாராயணர், வைணவத்தின் தலைசிறந்த மந்திரமாகிய ''துவயம்'' இரு கண்டங்களாக உள்ளது. "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே நாராயணாய நம:" இம்மந்திரத்தினுடைய பொருளை விளக்குவதாய் உள்ளது. லெக்ஷ்மி தேவியினுடைய கடாக்ஷத்தினாலேயே பெருமாளின் திருவடியைப் பற்ற முடியும் என்பதாகும்.

2. சக்கரத்தாழ்வார். அஞ்ஞான இருள் நீங்கி ஞான ஒளி பெற வழிபடவேண்டிய ஸ்ரீ சுதர்சன மஹா மூர்த்தியினுடைய வடிவம்.

சக்கரம் இறைவனது உள்ளத்தைக் குறிக்கும் அது சக்கரம் போல் சுழன்று நல்லோரைக் காத்து நல்வழியில் அவனை வாழ்விக்கிறது.

3. ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டுள்ள பெருமாளின் வடிவம். பார்க்கடலுள் பையத்துயின்ற பரமன். ஆதிசேஷன் ஐந்து தலை உடையவர். அதன் மீது பள்ளி கொண்டுள்ளார் பெருமான். கிழே பாற்கடல், இது பால் போன்ற குணங்களைக் குறிக்கும் அல்லது தூய்மையாகும். மனிதன் நுகரும் சிற்றின்ப நுகர்ச்சி ஒலி, உணர்ச்சி, உருவம், மணம், ருசி ஆகிய ஐந்தை யோகத்தால் வென்றவன் நற்குணக் கடலாகத் திகழ்வான் என்பதைக் குறிக்கும்.

4. பரமபத நாதன். ஆதிசேஷன் மீது ஒரு காலை மடக்கி ஒரு காலைத் தொங்கவிட்டு வீற்றிருக்கும் திருக்கோலம். இது எட்டெழுத்தின் தெய்வம். பதரிகாச்ரமத்தில் நரன், நாராயணன் என இரு வடிவில் திருமால் எழுந்தருளியிருக்கின்றார். இதனில் ஒன்று குரு வடிவம். மற்றொன்று சீடன் வடிவம். நரனுக்கு நாராயணன் எட்டெழுத்தை உபதேசித்ததாகக் கூறுவர்.

('' ஓம் நமோ நாராயணாய '') இதன் உட்பொருள் சூரியகலை என்ற வலது காலை மேலே அமைத்து, இடது காலை தொங்கவிட்டு அமர்ந்துள்ளார்.

யோகம் முடிந்த நிலையில் சந்திரகலையில் இருக்கலாம். அப்போது இடது காலை மேலே வைத்து வலது காலை தொங்கவிட வேண்டும்.

ஆகவே பரமபதநாதன் சூரிய கலையில் இங்கு உள்ளார்.

5. விபீஷணனை ஸ்ரீராமன் கடலில் ஆட்கொள்ளும் காட்சி. இது இராமாயணத்தின் கடைசி வார்த்தையாகும் எக்காலத்திலும், எந்த தேசத்திலும் பஞ்சபூதங்களிடமிருந்துக் காப்பாற்றுவேன் என இராமர் விபீஷணனுக்குக் கூறியதாகும்.

கடல் : பிறவிக் கடல்

விபீஷணன் : அற வாழ்வில் நிலையாக நின்று அற வழியில் நடந்தவன்.

இராமன் : அனைத்து யோகிகளாலும் மகிழ்வுடன் தியானிக்கப்படும் பரம்பொருள்.

அறவழி நடப்போனை யோகிகள் மகிழ்ந்து இதய கமலத்துள் வைத்து வணங்குவர். வழிபடுவோரைப் பரம்பொருள் பிறவிக்

கடலைக் கடந்து தன்னுடைமையாக்கி அனைத்துப் பொருள்களிட மிருந்தும் எவ்வித தீமைகளும் ஏற்படாவண்ணம் காத்தருளு கிறான்.

6. வராஹமூர்த்தியின் மடியில் பூமி தேவி. பூமி தேவிக்கு வராஹர் பக்தி மார்க்கத்தை உபதேசம் செய்த காட்சி. வராஹர் செய்த உபதேசத்தை வராஹசரமச்லோகம் என்பர். பாதாளத்தில் அழுந்திய பூமியை இறைவன் வராஹ உரு எடுத்து தன் இரு கடைவாய்ப்பற்களால் எடுத்து அதற்கு ஞானமளிக் கிறார். உடலை விட்டு ஆவி நீங்கும் போது கபம், வாதம், பித்தங் களால் ஏற்படும் தொல்லைகளால் மனிதன் இறைவனை நினைக்க இயலாது.

துன்பக்கடலில் அழுந்திய ஆன்மாவை இறைவன் ஏதேனும் ஓர் வடிவெடுத்து அன்பு, அருள் என்னும் தனக்கே உரிய இரு பண்புகளால் கைகொடுத்து கரையேற்றி உடலும் உள்ளமும் நல்ல நிலையில் உள்ள போது என்னை நினை. உன் உயிர் நீங்கும் போது உன்னை நினைத்து, உன்னை நான் காத்தருளுவேன் என விளக்குகிறார்.

7. தேரில் கண்ணன். அர்ஜுனனுக்கு கண்ணன் பகவத் கீதை உபதேசித்தல். இதை கீதா சரமஸ்லோகம் என்பர். உலகத் தொடர்புகள் யாவற்றையும் நீக்கி என் திருவடிகளைப் பற்றுவாய். யாவற்றிலிருந்தும் விடுதலையை நானே அளிக் கிறேன்.

தேர் : உடல்; மனம் = கடிவாளம்; குதிரைகள் : பஞ்ச பூதங்கள்; ஆன்மா = தேரில் அமர்ந்திருப்பவன்.

கண்ணன் சிறந்த ஞானக் கண்ணும் அருள் நோக்கும் உடையோன், ஆசாரியன்.

மிகத் திறமையுள்ள தேர்பாகன் கடிவாளத்தால் குதிரை களைக் கவனமாக அடக்கிச் செலுத்தாவிடில் தேரில் அமர்ந் துள்ளோன் தீய வழியில், நேர்மையற்ற வழியில் சென்று அழிவை அடைவான் அதுபோன்று நிறை ஞானத்து ஒரு மூர்த்தியாய், ஆற்றல் மிக்கானாகிய, இறைவன் தன்னருள் சுரக்கும் திருவுள்ளத்தால், ஆன்மா ஐம்புலன்கள் வழிச் செல்லாது, பஞ்ச பூதங்களையும் அடக்காவிடில் உடலுள் அமர்ந்

துள்ள ஆன்மா தீய வழிகளில் சென்று அழிவை அடையும் என்பதாகும்.

தத்துவம் மூன்று வகைப்படும்

| | | |
|---|---|---|
| அசேதனம் | — | உயிரற்ற பொருள் |
| சேதனம் | — | உயிருள்ள பொருள் |
| ஈச்வரன் | — | பரம்பொருள் |

வைணவ சமயத்தில் தலைசிறந்த ஐந்து ஈச்வர ரூபங்கள் இவைகளே :

| | |
|---|---|
| பரமபதநாதன் - பரதத்துவம் | — ஒன்று |
| பாம்பணையில் பள்ளிகொண்டமாயன் - வியுஹம் | — இரண்டு |
| இராமர், கிருஷ்ணர், வராஹர் - விபவம் | — மூன்று |
| இவர்களெல்லாம் அந்தர்யாமி | — நான்கு |
| அர்ச்சை | ஐந்து |

ஒவ்வொரு ஜீவனுள்ளும் உறைந்திருப்பது அந்தர்யாமி, அது கண்களுக்குப் புலனாகாது. கோயிலினுள் வழிபாடுடைய கடவுள் அர்ச்சாவதார மூர்த்தி. இந்தப் படியாக ஐந்து வகையிலே ஸ்ரீ மஹாவிஷ்ணு எழுந்தருளியிருக்கிறார். இந்த வகையில் வைணவ சமய சித்தாந்தம் தெளிவுபடுத்துகிறது.

அடுத்துள்ளது ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி உபாயம் காட்டி உதவுபவள் இவளே. சக்தி துணை நிற்கவேண்டும் என்பது இதன் பொருள்.

அடுத்துள்ளது அபூர்வ சிற்பக் கலைக்கூடமாகும். ஸ்ரீரெங்க விலாச மண்டபம் எனப்படும். இதில் மிக அழகிய சிற்றின்ப பேரின்பச் சிற்பங்கள் உள்ளன. இருவகை இன்பங்களையும் காட்டி மகிழ்விப்பவள் ஆண்டாள். குண்டலினி சக்தியே ஆண்டாள். குண்டலினியை மேலேற்றினால் ஏற்படும் அனுபவங்களைக் கூறுகிறது.

ஆண்டாள் சந்நிதி சமீபம் வேணுகோபாலன் சந்நிதியின் பின்புறம் பல அபூர்வ சிற்பங்கள் உள்ளன.

ரெங்கவிலாச மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் கார்த்திகைக் கோபுரம் உள்ளது. அதன் முன் பகுதியில் வட்ட வடிவில் கார்த்திகைத் தீபத்தன்று சுடலை கொளுத்தப்படுகிறது. அதன் முன்பாக நின்ற திருக்கோல யோகஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. விநயகர் உருவம் கோபுரத்தில் உள்ளது. யோகக்கனல் மேலே எழுவதை இது குறிக்கிறது.

சக்கரத்தாழ்வார் சந்நிதி : கார்த்திகை கோபுரத்தின் முன் பாக இடது பக்கத்தில் சக்கரத்தாழ்வார் சந்நிதி உள்ளது. ஆயிர இதழ்த் தாமரை – சகஸ்ரதள தாமரை மீது வலது பாதத்தை முன் வைத்து யோக நிலையில் நின்றுள்ளார். வலது பாதம் சூரிய கலையைக் குறிக்கும். சக்கரத்தாழ்வாரைச் சுற்றி வட்ட வடிவில் தீச்சுடர் அமைந்திருப்பது யோகக்கனலாகும். சக்கரத்தாழ்வார் முன் பக்கம் ஆயுதங்கள் தாங்கிய பதினாறு கைகளுடன் உள்ளார். பின்புறம் நரசிம்மர் அமைக்கப் பட்டுள்ளார்.

யோகநரசிம்மரின் நான்கு கைகளில் நான்கு சக்கரங்கள் உள்ளன. இவை மனமானது நான்கு விதமாகச் சுற்றுவதைக் குறிக்கும்.

யோகநரசிம்மரும், சக்கரத்தாழ்வாரும் கல்லால் அமைக்கப் பட்ட யந்த்ரம். சக்கரத்தாழ்வார் ஓர் காலத்தில் மிகவும் உக்கிரமாக காட்சியளித்து வந்தார். முற்கால பெரியோர் சக்கரத்தாழ்வார் கோயிலுக்கு எதிரில், உடையவராகிய இராமானுஜர் சந்நிதி சமீபம், பார்த்தசாரதியை அமைத்து சக்கரத்தாழ்வார் உக்கிரத்தை நீக்கினர் என்பர்.

வசந்த மண்டபம் : சக்கரத்தாழ்வார் சந்நிதி ஒட்டி வடதிசையில் உள்ள சோலையில் வசந்த மண்டபம் உள்ளது. இங்கு நம்பெருமாள் வைகாசி மாதத்தில் அமர்வது உலக இன்பத்தைச் சுவைக்கும் கருத்தைக் கூறுவதாகும்.

கார்த்திகை கோபுரம் எதிரில் அரும் பொருள்காட்சியகம் உள்ளது. இங்கு தந்த சிலைகள் மற்றும் பல பொருள்கள் உள்ளன.

உடையவர் சந்நிதி : கார்த்திகைக் கோபுரம் முன்பாக வலது பக்கத்தில் உடையவர் சந்நிதி உள்ளது.

7

ஸ்ரீரெங்கத்தில் உள்ள உடையவர் மொத்தம் மூன்று இடங்களில் உள்ளார் என்பர்.

தானான திருமேனி — ஸ்ரீரங்கம் சகஸ்ராரம் வழியாக அமிர்தம் பொழிதல்

தமக்குகந்த திருமேனி — திருநாராயணபுரம்-நெற்றிக்கண்

தானுகந்தத்திருமேனி—ஸ்ரீபெரும்புதூர் – மூலாதாரம்.

உடையவரின் பூத உடல் இங்கு பூமிக்கடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் தற்போதுள்ள உடையவர், புற்று மண்ணால் தானாக ஏற்பட்டதால் அபிஷேகம், எண்ணெய்க்காப்பு ஏதும் நடைபெறுவதில்லை. ஆனாலும் விரல் நகம், தலைமுடி, நம் கண்ணுக்கு இயற்கையில் மனித உடலில் அமைந்துள்ளது போன்ற தோற்றத்துடன் உள்ளது.

பார்த்தசாரதி சந்நிதி உடையவர் சந்நிதியை அடுத்து உள்ளது. சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு எதிரில் பார்த்தசாரதி சந்நிதியின் மண்டபத்தின் மேல் முகப்பில் பாஞ்சஜன்யம் (சங்கு) உள்ளது.

வலது பக்கம் பார்த்தசாரதி சந்நிதி உள்ளது. அர்ச்சுனனைக் கர்மங்களை முடிக்கப் போரிடத் தூண்டினார். இந்த யுத்தத்தையே கார்த்திகைக் கோபுரத்தின்முன் கடலை கொளுத்தி யோகாக்கினியைக் காட்டுகிறார்கள். இச் சந்நிதிக்குப் பக்கத்திலுள்ள மண்டபத்தில் (ஆயிரங்கால் மண்டபத்தின் எதிரில்) போர்க் காட்சிகள், பேரின்ப, சிற்றின்பச் சிற்பங்கள் உள்ளன.

துவாரபாலகியர், கங்கை, காவிரி இருவரும் கார்த்திகைக் கோபுரத்தின் இரு பக்கமும் நிற்கிறார்கள். காவிரியும் கங்கையுமாகிய கருணை நீரில் மூழ்கி உள்ளே செல்வதை இது காட்டும்.

இரண்டாவது ஆதாரம் : ஸ்வாதிஷ்டானம் – கருட மண்டபம். கருடாழ்வார் யோகநிலையில் வலது காலை மேலே எடுத்து வைத்து சூரிய கலையில் உள்ளார். தலை முதல் பாதம் வரை உடல் முழுதும் பாம்புகள் சுற்றியுள்ளன. வாசி சக்தி ஓட்டத்தைக் குறிப்பதாகும்.

சூரியபுஷ்கரணி : கருடாழ்வார் சந்நிதி அருகே கிழக்கே உள்ளது. கருட மண்டபத்தின் வடக்குப் பகுதியில் இராமாயணக் காட்சிகள் படி இறங்கும் இடத்தின் இரு பக்கமும் வடக்குப்

பார்த்துள்ளன. இவை 96 தத்துவங்களின் போராட்டத்தைக் குறிக்கும்.

நம்மாழ்வார் சந்நிதி. இது கோடைகால உஷ்ணம் தணிய பாலில், தேங்காய், மாங்காய், பலா, வாழைக்காய் யாவும் முக்கால் பழமாகச் சேர்த்து அத்துடன் தேன், ஏலக்காய், குங்குமப்பூ, நெய், வெல்லம், மிளகு, சீரகம் சேர்த்து நீரின்றி வேக வைத்து பிரசாதமாக வழங்கப்படும். வைகாசி மாதம் நம்மாழ்வார் திருநட்சத்திரமான விசாகத்தன்று நம்மாழ்வார் சந்நிதியிலும் ரெங்கநாதர் சந்நிதியிலும் மட்டும் வழங்கப் படுகிறது.

கருடாழ்வார் சந்நிதி மண்டபத்திலுள்ளது. இவரின் அருட் பார்வையால் 96 தத்துவங்களும் அடங்கும் என்பர். இதன் இடது பக்கத்தில் நெற்களஞ்சியம், பசுமாடுகள் உள்ள இடங்கள் உள்ளன. காமதேனு வாழும் இடம், உணவு வழங்குமிடம் உள்ளன. வலது பக்கம் அன்னமயகோசம் உள்ளது.

வெட்டவெளி. அடுத்தகோபுரம் செல்லும்முன் உள்ள இந்த இடைவெளிப்பகுதி தாயார் சந்நிதிக்கு செல்லவும், ஆலயத்தை வலம் வரவும் பயன்படுகிறது. உடல் கூற்றில் யோக அனுபவத்தில் சூன்யம் (ஆகாசம்) தென்படுவதை இது குறிக்கும்.

மூன்றும் ஆதாரம். மணிபூரகம் ஆர்யபட்டாள் வாசல் கோபுரத்தின் முன்பக்கம் பித்தளைப் படியின் முன்பக்கம் பன்னிரண்டு ராசிகளும், பின்பக்கம் இருபத்தேழு நட்சத்திரங் களும் அமைக்கப்பட்டுள்ளன. நாட்கள், கோள்கள் இவற்றின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு உள்ளே, யோகநிலையில் முன்னேறிச் செல்லவேண்டும் என்பதை இது குறிக்கும்.

ஆஞ்சநேயர். உள்ளே சென்றதும் வலது பக்கத்தில் கிழக்குப் பகுதியில் உயர்வான மேடைமீது யோகநிலையில் அமர்ந்துள்ளார். தலையை உயர்த்தி அவரைக் காண்கிறோம். பார்வையை மேல் நோக்கியே செலுத்தவேண்டும் என்பது இதன் கருத்தாகும். இச்சந்நிதியின் பக்கத்தில் இரு நெய்த்தொட்டிகள் உள்ளன. இவற்றில் முற்காலத்தில் நெய் நிறைந்திருக்கும். பக்தர்கள் வழங்கும் காணிக்கை நெய் இதில் சேமித்து வைத்து உபயோகப் படுத்தி வந்தனர். இன்றும் ஸ்ரீரெங்கத்தில் சுவாமி புறப்பாடு முதல் பிரசாதம்வரை எதற்கும் நெய்தவிர வேறு எண்ணெய்களைப் பயன்படுத்துவதில்லை. சுவாமி புறப்பாட்டுக்கு நெய் பந்தம்தான்

பயன்படுத்தப்படும். வேறு ஒளி விளக்குகளைப் பயன்படுத்துவ தில்லை.

யோகக் கனல் நம்மை எரிக்காதிருக்க நெய் பயன்படுத்த வேண்டும் என்பதை இந்த நெய்த் தொட்டிகள் தெரிவிக்கின்றன.

பக்கத்திலேயே மடப்பளி அமைந்திருப்பது ஜாடராக் கினியை—பசியைச் சமனப்படுத்துவதற்குத் தேவையான சாத்விக உணவைக் குறிக்கும். இடது பக்கம் தெற்கு வடக்கிலுள்ள மண்டபம் வாசி ஓட்டத்தைக் குறிக்கும். இம்மண்டபத்தில் பேரின்ப, சிற்றின்ப கண்ணன் திருவிளையாடல் சிற்பங்கள் உள்ளன. ஒரு சிற்பத்தில் விந்து தண்டத்தை ஒரு பாதி சாய்த்து மேல் நிலைக்குக் கொண்டுவந்திருக்கும் நிலையிலும், மற்றொரு சிற்பத்தில் விந்து தண்டத்தை செங்குத்தாக மேல் நிலைக்குக் கொண்டுசென்றிருக்கும் நிலையிலும் அமைத்துள்ளனர். நாம் விந்தை கட்டிக்குக் கொண்டுவந்தால் அது நெற்றியில் மணியாக விளங்கிறது. இதுதான் ரசமணி—காயகற்பம்—காமதேனு - கற்பக விருட்சம் எனப்படும்.

பிரசவ காட்சிச் சிற்பம் ஒன்றும் உள்ளது. சிற்றின்பம், உலக விவகாரம் முதலியவற்றில் ஈடுபட்டு யோக அப்பியாசம் செய்யாவிடில் மறு பிறவி உண்டு என்பதைப் பிரசவக் காட்சி விளக்குகின்றது. பேரின்பக் காட்சி நாம் யோக நிலையில் மேலே தொடர்ந்து முன்னேறினால் நாமும் அவதார புருஷராகலாம் என்பதைக் கூறுகிறது. இந்நிலையைத் தாண்டிச் சென்றால் சொர்க்கத்தை அடையலாம்

முன்பக்கத்தில் துவஜஸ்தம்பமும், பலிபீடமும் உள்ளன. சுழு முனையை மேலேற்றுவதைக்காட்டுவதே துவஜஸ்தம்பம். மும்மலங்களைப் பலியிடுவதைக் குறிப்பதே பலிபீடம்.

**படியேற்றம் :** முதலில் ஏறும் படிகள் மூன்றும் உயரமானவை. நான்காவது படி இரு விரல் உயரமானது. ஐந்தாவது ஆறுவது படிகள் ஒரு விரல் உயரம். ஆறு ஆதாரங்களை இவை குறிக்கும். இவற்றைக் கடந்து செல்லவேண்டும். இவ்விடத்தில் முதல் மூன்று படிகள்தான் கடினம் என்பதைக் குறிக்கிறது. இம்மூன்று படி களைக் கடந்து நாம் யோக நிலையில் முன்னேறிச் சென்றால் தொடர்ந்துவரும் அடுத்த மூன்றுபடிகளையும் எளிதாகக் கடந்து செல்ல இயலும் என்பதைக் குறிக்கும்.

இம்மண்டலத்தைவிட்டு பிற மண்டலங்களுக்குச் செல்ல எப்படி ஓர் இயந்திரத்தைப் பயன்படுத்திச் செல்கிறார்களோ அது போன்று நாமும் யோக நிலையில் படிப்படியாக முன்னேறிச் சமாதி நிலையை எளிதில் அடைய, முயற்சி செய்யும்போது உலக விவகாரப் பற்றைவிட்டு விலகிச் செல்லவேண்டும்.

நான்காவது ஆதாரம் : அனாகதம் நாழிகைக் கேட்டான் வாசல் உட்பக்கம் சங்கநிதி, பதுமநிதி துவாரபாலகர்போல் பெண் வடிவில் அமைத்துள்ளனர். இது செல்வங்கள் யாவற்றையும் யோக நிலையில் பெறலாம் என்பதைக் குறிக்கிறது.

நான்கு தூண்கள் உள்ள மண்டபம் தென்பக்க வாசல்படியை ஒட்டி உள்ளது. அடுத்து மேற்குச் சுற்றில் தனித்தனியாக இரு மண்டபங்கள் நான்கு தூண்கள் வீதம் உள்ளன. உள்ளே நாம் சுவாசிக்கும் காற்று (பிராணவாயு) வாசி எட்டு அங்குலம், வெளியேறும் காற்று (அபான வாயு) பன்னிரண்டு அங்குலம் இதில் வீணாக வெளியேறும் நான்கு அங்குல சுவாசத்தை பற்றுவதற்கே முன்பக்கம் நான்கு தூண்கள் உள்ள மண்டபமும் பின் மேற்குப் பிரகாரத்தில் நான்குத் தூண்கள் உள்ள இரு மண்டபங்களும் உள்ளன. ஆகமொத்தம் பன்னிரண்டும் சேர்த்துச் சூரிய கலையைப் பூர்த்திசெய்யவேண்டும் என்பதை விளக்கும். தொடர்ந்து பிரகாரத்தைச் சுற்றி வரும்போது கிழக்குப் பகுதியில் கிளி மண்டபம், அர்ச்சுன மண்டபத்தை ஒட்டி உள்ளது. கிளி மண்டபத்தில் கிளிகள் பறந்து சென்றுவிடாதபடி கூண்டில் அடைத்துவைத்துள்ளனர். கிளிகளைப்போல் பிராண சக்தியை உடலில் அடக்கி வைத்து மேல்நோக்கி எழுப்ப பிர்ம்ம மந்திரத்தில் சேர்க்கவேண்டும் என்பதை இது குறிக்கிறது. பள்ளி வாசலில் முகமதியர் புறா வளர்ப்பதும் இதே கருத்தாக இருக்கலாம்.

**சுற்றுப் பிரகாரங்கள் :** சுற்றிலும் உள்ள பிரகாரத்தின் ஓரத்தில் உயரமான மண்டபங்களுக்குக் கீழே (கிளி மண்டபப் பகுதி) மேடையின் உள்ளே சுரங்கப்பாதைகள் அமைத்துள்ளனர். இவை அதோ முகத்தைக் குறிக்கும். மேலே உள்ள வெளிப் பாதை ஊர்த்துவ முகத்தைக் குறிக்கும். யோக நிலையில் மேல் நோக்கி செல்லவேண்டும் என்பது இதன் கருத்தாகும். சுற்றி நடந்துவரும்போது சேனை முதலியார் சந்நிதி. அர்ஜுன மண்டபம் ஒட்டி உள்ளது.

சேனை முதலியார் ஓர் தளபதி போன்றவர். இவர் ஒவ்வொரு திருவிழா ஆரம்பத்தின் முன்தினம் திருவீதி உலா வருவார். அவர் நாட்டு நடப்பை அறிய வருவதாக ஐதீகம்.

இக் கோயிலைச் சுற்றி இருவர் இருவராக நடனமாடும் சிற்பங்கள் உள்ளன. இடகலை, பிங்கலைகளில் வாசி இயங்குவதை இது விளக்குகிறது. கடைசி சிற்பத்தில் ஒரே ஒருவர் மட்டும் நடனம் ஆடுவதாக உள்ளது இது சுழு முனையில், புருவ மத்தியில் வாசி ஒன்றுபட்டு ஒரே முகமாக மேல் நோக்கிச் செல்வதைக் காட்டும். ஆட்டம் இத்தோடு முடிகிறது. நாழிகை கேட்டான் வாசல் கடந்ததுமே, சிற்றின்ப உணர்வுகள் மறைகின்றன. பேரின்ப உணர்வே நிலவும், இங்கே சாதாரண நான்கு தூண்களுடைய மண்டபம் ஒன்று உள்ளது. இதில் ஊஞ்சல் வளையங்கள் உள்ளன. யோகிகள் எங்கும் பறந்து சென்று வரக்கூடியவர்கள் என்பதை இச் சிற்பங்கள் கூறுகின்றன.

அர்ச்சுன மண்டபம் : அறுபத்திநான்கு தூண்கள் கொண்டது. அவ்வமைப்பில் முப்பத்திரண்டு தூண்கள் ஒரு வகையாகவும், மற்றும் முப்பத்திரண்டு தூண்கள் வேறு வகையாகவும் அமைத்துள்ளனர். மார்கழிமாதத்தில் இம் மண்டபத்தில் நம் பெருமாள் யோகத்தில் வீற்றிருக்கிறார். மார்கழிமாத வைகுண்ட ஏகாதசித் திருவிழாவில் பகல் பத்தில் பத்தாம் நாள் மோகினி அவதாரத்தில் நம் பெருமாள் புறப்பட்டு வருதல் குண்டலினி சக்தி புறப்பட்டு வருவதைக் குறிக்கும்.

சொர்க்கவாசல் திறப்பு : யோகம் பூர்த்தியாகி, பிர்மரந்திரம் திறப்பதைக் குறிக்கும். பகல் பத்து. பத்து தினங்களும் நம் பெருமாள் வலம் வந்து மண்டபத்தில் படியேறும்போது ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலே வருகிறார்.

பெரிய மண்டபம் பன்னிரண்டு தூண்கள் உடையது. மண்டபத்தை ஒட்டி தென்மேற்குப் பகுதியில் சிறிய கண்ணாடி அறை உள்ளது. அறை முழுதும் எங்கு நோக்கினும் தானே தெரிவதாலும், சுவரே தெரியாததாலும், தன்னை மட்டுமே காணும் பிர்மநிலை உணரப்படுகிறது. பிர்ம்மோத்ஸவக் காலங்களில் இங்குக் கண்ணாடி சேவை நடைபெறும்.

சூரிய மண்டலம் அடைந்தால் நம் உடலில் இயற்கையாகவே நறுமணம் வீசும். இது குறித்தே இங்கு சந்தன மரத்தால்

அமைக்கப்பட்ட மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தை சந்தனு மகாராஜா அவர்கள் அமைத்தார் என்பர்.

ஐந்தாம் ஆதாரம் : விசுத்தி உள்மண்டபம். இங்கு செல்ல ஆறு படிகள் உள்ளன. இவை ஆறு ஆதாரங்களை உணர்த்துவன. அதனைக் கடந்து சென்றால் செப்பு வடிவில் துவாரபாலகர்கள் ஜெய, விஜயன் என்ற பெயரில் உள்ளனர். இவர்கள் ஆள்காட்டி விரலை மட்டும் மேல் நோக்கி நிறுத்தி நிற்கிறார்கள். பிர்மநிலை ஒன்றே என்ற அனுபவம் பெற்று உட்செல்லும் நிலைக்கு விளக்கமாகும். வாயிலைக் கடக்க மூன்று படிகள் உள்ளன. மூன்று நாடிகளைக் கடந்து செல்வதைக் குறிக்கும். இவற்றைத் தாண்டிச் சென்றால் நாம் அடைவது அகமண்டபம். அதாவது ஆத்ம தரிசனம். ஒரே நேர் கோட்டில் பரமாத்மா தெரிகிறார். இவ்விடத்திலே இரவு, விடியற்காலை இரு நேரங்களிலும் தினசரி வீணை இசைப்பது சூரிய மண்டலத்தில் கேட்கும் நாதத்தைக் குறிக்கும். படிதாண்டி உள்ளே சென்றால் அக மண்டபம்.

ஆறுவது ஆதாரம் : ஆக்ஞை அகமண்டபம். இது வட்ட வடிவில் பதினாறு தூண்கள் கொண்டது. இதைச் சந்திர மண்டபம் என்றும் கூறுவர். இது சந்திர கலையைக் குறிக்கும்.

காயத்திரி மண்டபத்தில் தென்கிழக்கில் வராஹமூர்த்தி, வடகிழக்கில் அநந்தன், வடமேற்கில் நரசிம்ஹ மூர்த்தி, தென் மேற்கில் நாராயணன், விமான ஆரம்பத்தின் அடியில் கணநாதன், அதன் எதிரில் துர்கா உள்ளனர்.

மூலஸ்தானம் செல்வதற்கு ஒரே படி உள்ளது. இது உலகியலைக் கடந்து செல்லவேண்டும் என்பதைக் குறிக்கும். பிர்மரந்திரம் மூலஸ்தானத்தைக் குறிக்கும். படி தாண்டியதும் இரு பக்கமும் சலவைக்கல் தூண்கள் இரண்டு உள்ளன. இவை சூரியகலை, சந்திரகலை (இடகலை, பிங்கலை) களைக் குறிக்கும் இரு தூண்களையும் கடந்து சென்றால் மூலவர், ஆதிசேடன், தாமரை மீது மூன்றறைச் சுவற்றில் படுக்கையாக அமைந்து, பஞ்ச பூதங்கள் ஐந்து தலைகளைப் படமாக விரித்து நாக்குகளை நீட்டியபடி நிமிர்ந்திருக்க, அதன்மீது நம் பெருமாள் யோக நித்திரையில் உள்ளார். ஆதிசேடன் தான் இலட்சுமணன். அதுவே ஜீவாத்மா. பிரதி வெள்ளிக்கிழமை அன்று மூலவருக்கு கஸ்தூரி, புனுகு கலந்த தைலக்காப்பு சாற்று

வார்கள். மேலும் பவித்ரோத்சவ முடிவிலும், சாற்றுமுறைத் திருவிழாவிற்குப் பின்பும் தைலக்காப்பிடுவர், மேலும் ஆனி மாதம் ஆயிரம் குடங்கள் தீர்த்தாபிஷேகமான ஜ்யேஷ்டாபிஷேகத்தன்றும் தைலக்காப்பிடுவர். உலகில் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே தெற்கு நோக்கி உள்ளார், தெற்கு எமன் திசை, ஸ்ரீ ரெங்கரை வழிபட்டால் எம பயம் இல்லை என்பர்.

இரவு திருமஞ்சனம் முடிந்தபின் பெருமாளுக்கு சிகப்பு கட்டமிட்ட லுங்கி சாற்றப்படுகிறது. பங்குனி மாதம் பங்குனி உத்திரத்தன்று மட்டுமே பெருமாள் தாயார் சந்நிதியில் இருப்பது வழக்கம். இது வாசி யோகத்தால் ப்ரம்மரந்திரத்தை அடைந்து ஸ்ரீ சக்தி ஐக்கியமாவதைக் குறிக்கும். பங்குனி உத்திரத்தன்று மட்டுமே அக்காரவடிசில் பிரசாதமாக வழங்கப்படும்.

விஸ்வரூப தரிசனத்தின்போது பெருமாளை நோக்கி லெக்ஷ்மி வாசம் செய்யும் பசுவின் பின்புறமும், யானை தன் இரு மத்தகங்களுக்கு இடையே தீர்த்தம் கொண்டு வருவதால் யானையையும், குதிரைமீது மங்கல வாத்யமேற்றி ஒலி எழுப்புவதால் குதிரையையும், கன்னி மங்கலத்தின் அறிகுறியாகவும் மூலவர் முன்பு நின்று வழிபடுவர். ஆனால் தற்காலத்தில் குதிரையும் கன்னியும் வழிபடும் வழக்கம்மட்டும் நீக்கப்பட்டுள்ளது.

கோடைத் திருவிழாவில் ஆரம்பித்து ஒரு மண்டலம் கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றிலும் தீர்த்தம் தேக்கப்படுகிறது. இப் புனித தீர்த்தத்தில் குளித்தால் பாபாதி தோஷங்கள் நிவர்த்தியாகும் என்பர்.

ரெங்கநாதர் மூலஸ்தானத்தில் ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ளோர் யாவரும் தங்க விக்கிரகமாக உள்ளனர். இந்த விக்கிரகங்கள் யோகிகள் கண்களுக்கு மட்டுமே தெரியும் என்பர், இவ்விக்கிரகங்களை தினசரி விபீஷணன் நம் கண்ணுக்குப் புலப்படாது வந்து பூஜை செய்து செல்வதாக ஐதீகம். சுவர்க்கவாசல் திறந்ததும் பதினாறு தூண்கள் உள்ள மண்டபம் உள்ளது. இதில் பன்னிரண்டு தூண்கள் ஒரு வகையாகவும் மற்ற நான்கு தூண்கள் மற்றொரு வகையிலும் உள்ளன. பதினாறும் சேர்ந்து சந்திர கலையைக் குறிக்கும்

சந்திரபுஷ்கரணி அதன் பக்கத்தில் வட்ட வடிவமாக உள்ளது.

தன்வந்திரி சந்நிதி எதிரில் சந்திரபுஷ்கரணி உள்ளது. இவ்விடம் கடந்ததும் வினைத் துன்பங்கள், கரும நோய்கள் தீரும். யோகாக்கினியால் ஜென்மாந்திர வினைகள் தீரும்.

ஐந்து குழி மூன்று வாசல். ஐந்து குழியில் தாமரைப் பூப் பாதங்கள் உள்ளன. இதன் சமீபம் இரு தூண்கள் நெருக்கமாக உள்ளன. இவ்விரு தூண்கள் இடகலை, பிங்கலை. பாதம் என்பது வாசி. வாசியை மேல்நிலைக்கு — பிர்ம நிலைக்குக் கொண்டு சென்றால் சகஸ்ராரம் அடையலாம். தாமரைப்பூ பூக்க ஆரம்பிக்கும். இதை அவரவர்கள் உணர்வு நிலையில் தலையின் உச்சியில் அறியலாம். இதைத் திருமந்திரத்தில் சேறு இல்லாது பூக்கும் பூ என்று திருமூலர் கூறியுள்ளார். மூன்று வாசலில் ஒன்றான தாயார் சந்நிதி செல்லும் வாசலில் ஒரு படி உள்ளது. இது உலகவிவகாரங்களை நீக்கிப் பிர்மம்தான் ஒன்று என நினைத்து ஒரு படியைக் கடந்தால் தாயார் என்ற குண்டலினி சக்தி கிடைக்கும் என்பதாகும். இச்சக்தி நமக்குக் கிடைத்ததும் ஞானம் யாவும் கிடைக்க ஆரம்பித்துவிடுகிறது.

மற்றொரு பக்கம் – மூன்று வாசலில் — ஒரு வாசலுக்கு — யோக நரசிம்மர் சந்நிதியிலிருந்து மீண்டும் தன்வந்திரி சந்நிதி வரும் வழியில் நான்கு படிகள் உள்ளன, நான்கு படிகள் நான்கு வேதம். சாஸ்திரம், ஞானம் கிடைக்க ஆரம்பித்துவிடுகிறது. இவை கிடைத்ததும் சுவர்க்க வாசல் இதற்குச் செல்லும் வழியில் படியே இல்லை.

தாயார் சந்நிதி : தாயார் சந்நிதி முன்பக்கம் ஆஞ்சநேயரை தூணில் அமைத்துள்ளார்கள். வாசியே ஆஞ்சநேயர். உள்ளே சென்று வெளிவரும் வழியில் சிற்றின்பக் காட்சிகள், இராமாயணக் காட்சிகள், அவதார புருஷர்கள் சிற்பங்கள் உள்ளன.

ஊஞ்சல் மண்டபம். இது ஆட்டம் இத்துடன் அடங்குவதைக் குறிக்கிறது.

துளசி மாடம், வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. கீழே உள்ள ஆமை, ஐம்புலனையும் அடக்கவேண்டும் என்பதைக் குறிக்கும். துளசி மாடம் மேரு பர்வதம் (மந்திரமலை). வாசுகிப் பாம்பு காற்றையே உணவாக உண்டு வேறு ஆகாரம் உண்ணாது வாழும் என்பர். இங்கு அமுதம் பெற்று ஐந்து படிகள் கடந்து அகமண்டபம் செல்லவேண்டும்.

அகமண்டபத்தில் அஷ்ட லெட்சுமிகள் உள்ளனர். படிகளில் பன்னிரண்டு ராசிகள் உள்ளன. இவற்றைக் கடந்ததும் தாயார் சேவை கிடைக்கும்.

தேசிகர் சந்நிதி : தாயார் சந்நிதிக்கு முன்புறம் இடது பக்கத்தில் மணி அவதவாரமாகிய தேசிகர் சந்நிதி உள்ளது. ஆட்டம் அடங்கிய பின் மணி விளைவதைக் காட்டுவதாக தேசிகர் சந்நிதி அமைந்துள்ளது. மணி விளைந்த பின் ஒருவனது சம்சார மார்க்கம் அறுக்கப்படுவதைப்போல் வலப்புறம் யோக நரசிம்மர் சந்நிதி அமைந்துள்ளது.

தாயார் சந்நிதியில் தனிப்பட்ட முறையில் திருவிழா காலங் களில் கொடியேற்றுவதில்லை. தாயார் சந்நிதியில் 1. ஸ்ரீதேவி, 2. பூமிதேவி, 3. கர்மார்ச்சி ஆகிய மூவர் உள்ளனர். இவைத் தவிர உற்சவ தாயார் உள்ளார். உற்சவ தாயார் திருவீதி உலா செல்லும்போது கர்மார்ச்சி கார்யங்களுக்கு முக்கியமானவராகும்.

தாயார் தத்துவம் : ஆரம்பம் முதல் நமக்கு ஜீவ சக்தியை ஊட்டி வழிகாட்டும் சக்தியே தாயார். தாயார் படிதாண்டாப் பத்தினியாக அமைந்துள்ளது நம் சக்தியை எல்லை தாண்டாமல் சேமித்துப் பெருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. மேலும் பிராண சக்தியையும் வெளிவிடாது நிறுத்துவதைக் குறிக்கும் விந்தையும், பிராண சக்தியையும் நம் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்பதாகும்.

தாயார் சந்நிதி பின்பகுதியில் வசந்த மண்டபம் தனியாக உள்ளது படிதாண்டாத தாயார் சந்நிதியில் கோடை உற்சவம், வசந்த உற்சவம், நவராத்திரி, ஊஞ்சல் உற்சவம், வைகுண்ட ஏகாதசி முதலியன தனியாக நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி உற்சவம் மொத்தம் பத்து நாட்கள் மட்டுமே தாயார் சந்நிதியில் நடைபெறுகிறது.

தாயார் சந்நிதியிலிருந்து வெளியே வந்ததும் கம்பர், இராமாயணம் அரங்கேற்றம் செய்த நான்கு தூண்கள் உள்ள மண்டபம் உள்ளது. இத்தூண்கள் ஒவ்வொன்றும் மூன்று சிறு தூண்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் பதினாறு தூண்கள் உள்ளன.

இராமாயண அரங்கேற்ற மண்டபம் எதிரில் மிக உயர்ந்த மேடையில் யோக நரசிம்மர் உள்ளார். யோக நிலையில் முன்னேறியவர்கள், நன்மை, தீமை எவை தனக்கு ஏற்பட்டாலும், அதை வித்தியாசமின்றி, ஒன்றாகவே நினைத்து சிரித்து மகிழ்வர் என்பதை விளக்க யோக நரசிம்மர் சிரித்த நிலையில் அமர்ந்துள்ளார்.

யோக நிலையில் தாயார் கிடைத்ததும் அவதார புருஷர்களாகவாம். இதன் விளக்கமாக தாயார் சந்நிதி அருகே சந்திர புஷ்கரணியின் கிழக்குக் கரையில் பட்டாபி ராமர், சீதை, லெக்ஷ்மணர், ஆஞ்சநேயர் உள்ளனர். அடுத்துள்ள சந்நிதியில் ஆண்டாள், ஸ்ரீதேவி, பூமாதேவி, நீலாதேவி, பரமபத நாதன், குலசேகராழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார், திருமங்கையாழ்வார், நாதமுனிகள், கருடன், விஷ்வக் சேனர், உடையவர், பிள்ளை லோகாச்சாரியார் உள்ளனர்.

வெட்ட வெளியிலுள்ள வேணுகோபாலன் சந்நிதியில் இரவில் தூய பால் வழங்கப்படுகிறது. யோக முறையில் முன்னேறியதும் வெட்டவெளியில் சகஸ்ராரத்தில் அமிர்தம் கிடைக்கிறது என்பதன் விளக்கமாகும் பால் வழங்கப்படுவது.

ஆயிரங்கால் மண்டபம் தாயார் சந்நிதிக்கு எதிரே இம்மண்டபம் உள்ளது. சகஸ்ராரம் இது. ஜோதி வடிவமானது. மார்கழியில் விளக்கொளிகள் நிறைந்து ஒளிவீசும் இந்த நிலையை அடைவதே இறுதி இலட்சியமாகும். இந்த நிலையை அடைந்தால் நினைத்த இடத்திற்கு நினைத்தபோது சென்றுவரமுடியும் என்பதை இங்கு அமைத்துள்ள ரதத்தின்மூலம் உணர்த்தியுள்ளனர்.

**ஸ்ரீரங்கம் வீதிகள்:** மேற்கு வாசலுக்கு வெளியே தெப்பக் குளம் அமைந்துள்ளது. தெப்பக்குளம் இறைவன் தலையில் உள்ள சகஸ்ராரத்தைக் குறிக்கும். தெப்பக்குளம் அருகிலே பாம்புப் புற்று இருப்பது நாதத்தைக் குறிக்கும்.

அடையவளஞ்சான் வீதிகள் மூன்று பக்கமும் வளைத்துக் கொண்டிருப்பது. தென்புறம் ஒரு பாதி சாத்தார வீதியும் மற்றொரு பாதி கொல்லுப்பட்டறை வீதியும் உள்ளது. பல தொழில்கள் செய்த மக்கள் வாழ்ந்த இடம் இப்பகுதி.

சித்திரை வீதி நான்கு புறமும் நான்கு விதிகள் ப்ரம்மத்தை உணர்ந்தவர்கள் வாழ்ந்ததைக் காட்டும்.

கிருஷ்ணன் பிறந்த தினத்தன்று இக்கோயிலில் மட்டுமே உலக நலத்துக்காக சித்திரை வீதி உலா வரும்போது எண்ணை, சுண்டல் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் நிகமாந்த மகாதேசிகன் முதன்மையானவர். இவருக்கு இராமானுஜரைப் போன்ற ஆசார்யஸ்தானம் வழங்கப்பெற்றுள்ளது. தேசிகர் சைவ சித்தாந்தம் வளர்ந்த காலத்தில் சைவ சித்தாந்தம் தவறு, விசிஷ்டாத்வைதம்தான் உண்மையானது, என விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிரூபித்தார். தேசிகன் இல்லையேல் விசிஷ்டாத்வைத சித்தாந்தம் இல்லை.

உத்திரவீதி நான்கு புறமும் ஒரே முகமாக இறைவனைப் பார்த்தபடி உள்ளது. இதுவும் பிர்ம்ம நிஷ்டர்கள் வாழ்ந்த இடமாகும்.

கிழக்கு வாசல்: உத்திர வீதி கடந்து வெளி வரும்போது சித்திரை வீதிக்கும் உத்திர வீதிக்கும் இடையே உள்ள கோபுரம் சிற்றின்ப சிற்பங்கள் நிறைந்தது. இது சிற்றின்ப அனுபவத்தால் மனிதன் கீழ் நோக்கித் தாழ்வதைக் குறிக்கும். இக்கோபுரத்தைக் கட்டைக் கோபுரம் என்பர்.

வெள்ளைக் கோபுரத்தில் மட்டுமே சிற்பங்கள் மிகக் குறைவாக உள்ளது. சகஸ்ராரத்தை ஒட்டி இருப்பதால் ஆன்மா நிர்மலமாக உயர்ந்து ஓங்கி நிற்பதைக் குறிக்கும். பின்பு படிப்படியே புலன் உணர்வுகளில் ஈடுபட்டவர்கள் படிப்படியே தாழ்வதைக் கீழ்வாசல் கோபுரங்கள் உணர்த்தும். இக்கோபுரங்களைக் கடந்தால் நாம் காண்பது மயானம். இது யோக நிலையில் செல்லாத மனிதர் வாழ்வு, தோல்வி கண்டு வீணாக மடிவதைக் குறிக்கும்.

மொட்டைக் கோபுரங்கள்: நான்கு புறமும் உள்ள ஆரம்ப நிலைக் கோபுரங்கள்: இவை கட்டி முடிக்கப்படாது, நான்கு தூண் கள் மட்டுமே கிழக்கு, மேற்கு, வடக்குத் திசைகளில் உள்ளன. நம் முயற்சியில் நாமே யோக நிலையை அடையவேண்டும் என்பதை இக்கோபுரங்களைக் கட்டி முடிக்காது விட்டு விட்டு நம்மைக் கட்டி முடிக்கக் கூறியதிலிருந்து உணரலாம். நாமே கட்டி முடிக்க வேண்டும்.

இக் கோயிலில் வழிபாட்டு முறைகள் :

| | | |
|---|---|---|
| காலை | 6-15 | விச்வரூபம் |
| ,, | 8-30 | பாசிபருப்பு, ரொட்டி, பால், வெண்ணெய். |
| ,, | 9-00 | வெண்பொங்கல், தோசை, சுக்குவெல்லம், வாழைக்காய் கறி, எலுமிச்சம்பழ ஊறுகாய். |
| பகல் | 12-00 | பாயசம், வடிசில், கறி, மிளகு ரசம், பருப்பு, அதிரசம். |
| மாலை | 6-00 | வடை, அப்பம், தேன்குழல், பால்சாதம். |
| இரவு | 9-00 | அரவணை, ஊிரை. |
| ,, | 9-30 | பால். |

ஆரம்ப காலத்தில் கோயிலில் தினசரி செய்யும் ஆகாரங்கள் போன்று யோகி சாப்பிட்டு வரவேண்டும். இவ்வளவு ஆகாரங்களையும் யோகக்கினி எரித்து விடும். பின்பு படிப்படியாக மேலே கண்ட உணவு வகைகளைக் குறைத்துக் கொண்டு உப்பு, புளி, மிளகாய், எண்ணெய் முதலியவற்றை நீக்கி பச்சரிசி, பாசிப்பயறு சேர்த்து ஒரு கை பிடித்தபிடி எடுத்து பாலில் பொங்கி தினசரி ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு இரவில் பகவின் பால் சாப்பிட வேண்டும். மேலும் சில நாட்கள் கடந்த பின் ஒரே பசுமாட்டின் பாலை மட்டும் குடித்து வரவேண்டும். இந்த அடிப்படையில் தான் கோயிலில் பிரசாத - நைவேத்திய முறைகளை அமைத்துள்ளனர்.

இதற்கு அடுத்த நிலை காற்றை மட்டும் புசிக்கும் நிலை. அந்த நிலைதான் பரவாசுதேவர். அந்நிலை பறக்கும் நிலை. அந்த நிலை அடைந்தால் உடல் தங்கமாகிவிடும். இதை மூலவர் கோபுரத்தின் மீது தங்கக் கவசம் அமைத்து உணர்த்தியுள்ளார்கள், விமானத்தைச் சுற்றிலும் சுமார் 187க்கு மேற்பட்ட தேவதைகளின் திரு உருவம் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 230 பரிவாரங்களும் உள்ளன. இதன் விபரம் பாஞ்சராத்திர ஆகமத்தைச் சேர்ந்த "பாரமேச்வர ஸம்ஹிதை"யில் காணலாம்.

விமானத்தின் தெற்கு பக்கத்தில் பரவாசுதேவர், மேற்குப் பக்கத்தில் அச்சுதன், வடக்குப் பக்கத்தில் அனந்தன், கிழக்குப்

பக்கத்தில் கோவிந்தன் முதலிய திரு உருவங்கள் உள்ளன. சேனை முதலியார் சந்நிதி சமீபம் கீழே தங்கத்தில் செய்யப்பட்ட பாதம் உள்ளது. பாதம் என்பது வாசி. வாசியோக அப்பியாசம் செய்தால் நாம் அந்த நிலையை அடைய முடியும். இந்த யோக நிலைக்கு விளக்கமாகத்தான் ஸ்ரீரங்கம் கோயிலை அமைத்துள்ளார்கள். நமக்கு நவதுவாரங்கள் இருப்பது போன்று கோயிலிலும் நவதீர்த்தங்கள் அமைத்துள்ளார்கள். நம் உடலில் நவதுவாரங்கள் வழியாக நமது பிராண ஓட்டம் ஓடிக்கொண்டு விரயம் ஆகிறது. இதை நவத்துவாரங்களில் ஓடாமல் ஒரு நிலைப் படுத்தி யோக நிலையில் பெருமாள் பள்ளிகொண்டிருப்பது போல் செய்து வந்தால் ககனமார்க்கத்தில் நாம் பறக்க முடியும். கூடு விட்டுக் கூடு செல்ல முடியும். இதைத் திருமூலர் செய்து காண்பித்தார். என் உடலில் தற்போது காற்றை நிரப்பிக் காட்ட முடியும்.

யோகத்தில் பல முறைகள் உள்ளன. ஆனால் யாவரும் கடைசியாக இங்கு வந்துதான் ஆக வேண்டும். தியானத்தின் போது இந்திரியங்கள் யாவும் அடங்கி, மனது ஒரு நிலைப்பட்டு பிராண ஓட்டம் மெதுவாக ஓடும். அதையும் நிறுத்திச் சலனமின்றி செய்கிறார்கள். மனதைப் பிடித்து *வாசியைப் பிடி அல்லது வாசியைப் பிடித்து மனதை அடக்கு என்பர். மனது சாதாரணமாக அடங்காது. வாசி நின்று விட்டால் மனம் வேலை செய்யாது. இது சமாதி நிலை. இதையே தூங்காமல் தூங்கிச் சுகம் காணும் ஆனந்த நிலை என்பர். அந்த நிலையில் உலக விவகாரம் ஒன்றும் தெரியாது. அந்த ஆனந்தத்திலேயே மனம் லயித்து விடும். வாசியைப் பிடித்து மேலும் கீழும் செலுத்தி மனதை அடக்க இயலும்.

வாசியைத் திருப்பிப் படித்தால் சிவா என படிக்கலாம். மார்கழி மாதம் இருபது நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. பகல் பத்து எனப் பத்து தினங்களும் இராப் பத்து எனப் பத்து தினங்களும் திருவிழா நடைபெறுகிறது. இந்த முதல் பத்து தினங்களில் மூலவர் சந்நிதியிலிருந்து பெருமாள் கீழ் நிலைக்கு இறங்கி வந்து நமக்காக யோகத்தைச் செய்து காண்பிக்கிறார். சமாதி நிலையைக் கலைத்து இடை நிலையைக் கலைத்து, இடகலை, பிங்கலை வழியாக சந்திரகலை, சூரியகலை மும்மலம் கடந்து ஆறு ஆதாரங்களையும் கடந்து அர்ச்சுன மண்டபத்துக்குச் செல்கிறார். இங்கே யோகத்தை இப்பத்து தினங்களும் செய்த பின் பத்தாவது தினம் மோகினி அவதாரமாக புறப்படுகிறார். இதன் தத்துவம் குண்டலினி சக்தி புறப்பட்டுவிட்டது என்பதை நமக்கு உணர்த்துவதாகும்.

*வாசி = பிராணன்.

பத்தாவது தினம் சுவர்க்கவாசல் திறக்கப்படுகிறது. இது பிர்ம்மரந்திரம் திறப்பதைக் குறிக்கும். பிரம்மநிலை என்பது ஆயிரங்கால் மண்டபம். இந்த இடம் ஜெகஜ்ஜோதியாக இருக்கிறது. இந்நிலை இரவு பகல் அற்ற இடம். யோகாக்னி அதிகமாவதால் நல்ல ஆகாரம் உண்ணவேண்டும். அதனால்தான் இங்குக் காலை 6 மணிக்கு பொங்கலும், மத்தியானம் சம்பார தோசையும் வழங்கப்படுகிறது. சம்பார தோசை நெய்யிலேயே ஊறவைத்து செய்யப்படுவதால் சாதாரண உடல் நிலையில் உள்ள ஓர் தனி நபர் ஒரே வேளையில் உண்ணமுடியாது. யோகியால் உண்ணமுடியும். மற்றும் செல்வர் அப்பம், அரிசி வடை, சாதாரண தோசை, சர்க்கரைப் பொங்கல் முதலிய ஆகாரங்கள் பெருமாளுக்குப் படைக்கப்படுகின்றன. எட்டாம் திருநாள் வேடுபரி. இது 96 தத்துவத்திலிருந்து விடுதலை பெற்றதைக் குறிக்கும். அன்று நம்பெருமாள் தங்கக் குதிரை வாகனத்தில் உலா வருவார். இது வாசியின் ஓட்டத்தைக் குறிக்கும். அப்பியாசத்தில் குதிரை என்பது மனது. குதிரை என்ன செய்யுமோ அதேபோன்று திருடர்களிடமிருந்து தப்புவதற்காகக் குதிரை முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் ஓடும். இது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இங்கு நடைபெறுவது போன்று வேடுபரிவிழா திருமங்கையாழ்வார் அவதார ஸ்தலமான (சீகாழி தாலுகா) திருவாலிதிருநகரியில் மட்டும் நடைபெறுகிறது. இராப்பத்து உத்சவத்தில் பெருமாள் பரமபத வாசலைக் கடந்து திருமாமணி மண்டபத்தைச் சேர்வது ஜீவாத்மா சரீரத்தைவிட்டு வைகுண்டத்தை அடைவதற்கு தான் சாட்சியாக இருப்பதை உணர்த்துகிறார்.

யோகத்தில் பதினெட்டு கதிகள் உள்ளன. இங்கு சர்ப்பகெதி, வியாக்கிரகெதி, கஜகெதி, விருஷபகெதி, சிம்மகெதி ஐந்து நடையிலும் நம்பெருமாள் புறப்பட்டு வருகிறார். பகல் பத்து, இராப்பத்து முடிந்தபின் கடைசிநாள் நம்மாழ்வார் மோட்சம்.

ஸ்ரீரெங்கம் வடக்கு வாசல் சமீபம் கொள்ளிடக் கரையில் தசாவதாரக்கோயில் உள்ளது. இங்கு திருமாலின் பத்து அவதார சிற்பங்கள் உள்ளன.

ஸ்ரீரெங்கம் கோயிலுள் பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான சட்டமுனி அடக்கமாகியுள்ளார். இங்கு நவக்கிரகங்களுள் சுக்கிரன் மிக முக்கிய ஸ்தானம் வகிக்கிறார்.

இங்கு ரெங்கநாதர் இருபத்தொரு அடிகள் நீளம் உள்ளவர். காவிரியின் ஒட்டத்தில் மூன்று தீவுகளில் பள்ளிகொண்டுள்ள ரெங்கநாதர் உள்ளார்.

ஸ்ரீரெங்கப்பட்டிணம் மேற்கு ரங்கம், ஸ்ரீரெங்கம் தென்ன ரங்கம்.

உலகில் மிகப்பெரிய கோயில் ஸ்ரீரங்கம் ஸ்ரீரெங்கநாதர் கோயிலாகும். இங்கு இருபத்தோர் கோபுரங்களும், ஏழு பிரகாரங்களும், ஐம்பத்தோர் சுற்றுக் கோயில்களும், நூற்றி எட்டு மண்டபங்களும் உள்ளன.

ஆன்மா லயிக்கின்ற இடமே ஆலயம். கண்டபடி மனதை அலையவிடாது ஓர்நிலைப்படுத்தவே கோயில்களில் மூல விக்ரகத்தை அமைத்துள்ளனர். ஆடல்,பாடலால் வழிபட்டு மனதை ஒருநிலைப் படுத்தக் கோயில்களில் விழாக்களை அமைத்தனர். கோயில்களில் யோகிகள், ஞானிகளைச் சந்திக்கலாம். கோயில்களை சிற்பக் கருவூலங்களாக அமைத்துள்ளனர்.

வேதங்களிலும், பல நூல்களிலும் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காகப் பிரித்துள்ளார்கள். காவிரியை வேதமாகவும், வடபெருங்காவிரி எனப்படும் கொள்ளிடம் தென் காவிரி ஆகிய இரு நதிகளின் நான்கு கரைகளையும் அறம், பொருள், இன்பம், வீடாகக் கூறுவர்.

ஸ்ரீ ரெங்க விமானம் ஓம் எனும் பிரணவமாக உள்ளது எனக் கூறுவர். இங்கு நான்கு வேதங்களும் நான்கு கலசங்களாக அமைந்துள்ளன. இந்த விமானம் பிரம்மாவால் அமைக்கப்பட்டது என்பர்.

இதனை ஆழ்வார்கள் பதின்மரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். மூலஸ்தானத்தில் ஸ்ரீ ரெங்கநாதரைத் தவிர ஆறு மூர்த்தங்கள் உள்ளன. அவை ஸ்நபநபேரர்; நம்பெருமாள்; பலிபேரராகிய செல்வர்; திருவரங்கமாளிகையார்; தீர்த்தபேர ராகிய செல்வர்; சயனபேரராகிய செல்வர் எனப்படும்.

இன்றும் கொள்ளிட நதியிலிருந்து யானைமீது ஐப்பசியில் தினசரி தங்கக் குடத்தில் திருமஞ்சனம் கொண்டுவரப்படுகிறது.

ஐப்பசி மாதத்தில் தினசரி குடை, குடம், வட்டில் முதலியன தங்கத்தால் செய்யப்பட்டதை பயன் படுத்துகிறார்கள்.

தினசரி வழிபட்டுவரும் எம்பெருமானுக்கு நம்மை அறியாது சில தோஷங்கள் ஏற்படலாம். அவைகளை நீக்கச் சில விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

சித்திரை மாதத்தில் மலர்த்தோஷம் நீங்க பூச்சாத்தி விழா. ஆனி மாதத்தில் தீர்த்த தோஷம் நீங்க திருமஞ்சன விழா. ஆடி மாதத்தில் அன்ன தோஷம் நீங்க பெரிய பாவாடைத் திருவிழா. ஆவணி மாதத்தில் பூணூல் தோஷம் நீங்க பவித்ரோத்ஸவ விழா நடைபெறும். ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் தோஷம் நீங்க ஊஞ்சல் திருவிழா. கார்த்திகை மாதத்தில் தாம்பூலத்தோஷம், ஆடைதோஷம் நீங்க கைசிக ஏகாதசி விழா நடைபெறும். கார்த்திகை மாதத்தில் அக்னி தோஷம் நீங்க கார்த்திகை தீப உற்சவம். வேத பாராயண, திவ்வியப்பிரபந்த தோஷம் நீங்க திருவத்ய யனோத்சவம் உள்ளது. பக்ஷ்ய தோஷம் நீங்க பெரிய திருப்பாவாடைத் திருவிழா நடைபெறும். மாசி மாதத்தில் ஏனைய தோஷங்கள் நீங்க பந்தக் காட்சி நடைபெறும். பங்குனியில் உலாத்தோஷம் நீங்க பிரம்மோத்சவம் நடைபெறும்.

திருவிழா ஊர்வலத்தில் தசமூர்த்திகளும் முதலில் சென்றபின் எம்பெருமான் செல்வார். தசமூர்த்திகள் வழிபாடு பத்து வாயுக்கள், பத்து நாடிகள் இவைகளைக் கட்டுப்படுத்தி பிராண சக்திக்கு நீரும் ஆகாரமும் ஊக்கமும் அளிப்பதைக் குறிக்கும்.

சூரியப் பிரபையில் திரு உலா வந்து நம் புற இருளை நீக்கும் சூரியனைப் போன்று நம் அக இருளை நீக்குகிறார்.

அன்ன வாகனத்தில் திரு வீதி உலா வருதல் அன்னம் நீரை நீக்கிப் பாலைப் பருகுவது போன்று நாமும் உலக வாழ்வு என்னும் சேற்றில் அழுந்தாமல் யோக மார்க்கத்தில் முன்னேற வேண்டும் என்பதாகும்.

சிங்க வாகனத்தில் திரு உலா வருவது ஆணவத்தை அடக்க வேண்டும் என்பதாகும்.

கருடனை வேதச் சொல் வடிவமாகச் சொல்லப் படுகிறது. புற ஒலிகளை வென்றால் இறைவனை அடைந்து வீணை ஒலியைக் கேட்கலாம் என்பது கருட வாகன அமைப்பு மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது என்பர்.

யாளி வாகனம் சிங்கத்தை விட மேம்பட்டது நல்லன அல்லாத வற்றை நீக்கி, ஆண்மை, சாந்தி வைராக்கியத்தைக் குறிக்கிறது.

ஆதி சேஷ வாகனத்தில் வருவதன் மூலம் குண்டலினி சக்தியாகிய பாம்பை ஆட்டிவைப்பவன் நானே என விளக்கி யுள்ளார். குண்டலினி சக்தியை மேல் நிலைக்கு உயர்த்திச் செலுத்தி பிரம்மநிலையை அடைய வேண்டும் என்பதாகும்.

ஹனுமார் வாகனத்தில் வருவதன் மூலம் குரங்கு மனதை அடக்கவேண்டும் என்பர்.

குதிரை வாகனம் ஜீவனின் சுவாசத்தைக் குறிக்கும். சுவாசத்தை தேவையற்ற வழிகளில் அலைய விடாது, நேரான வழியில் செலுத்தி பற்றற்று ஒடுங்கி நிற்கும் வாசி யோகத்தைப் பின்பற்றுவதால் அடையும் சிறப்பைக் குறிக்கும்.

தேர் உடலைக் குறிக்கும். அகங்காரம் நீங்கி சுவாசத்தைப் படிப்படியாக அடக்கி வந்தால் உடலைத் தன் வயப்படுத்தி யோகி ஆகலாம் எனக் கூறுகிறது. தேருக்கு மொத்தம் ஆறு சக்கரங்கள் உள்ளன. இது ஆறு ஆதாரங்களைக் கடந்து மேல் நிலைக்குச் செல்ல வேண்டும் என்பதை ஆதாரமாகக் கொண்டது.

அடுத்த நாள் ஸப்தாவரண விழா. அன்று மேளதாள ஒலி இல்லை. இது உடலைத் தன் வயமாக்கியவருக்கு மோன நிலை கிடைக்கும் என்பதை விளக்குகிறது. அன்று இராமாநுஜரைக் கோயில் அர்ச்சகர் கையில் ஏந்தி வருகிறார். இராமாநுஜருக்கு ரெங்கநாதரின் மரியாதை நடைபெறுகிறது. இதனைக் கைத்தலச் சேவை என்பர். இதன் மூலம் மோன நிலை அடைந்த யோகியரை இறைவன் போற்றித் தன் உடைமையாக்கிக் கொள்கிறார் என்பதை விளக்குகிறார்கள்.

யானை வாகனத்திற்கு இரு மத்தகமும் இரு கொம்பும் உள்ளன. இராக தோஷங்கள் இரு மத்தகங்கள். காமக் குரோதங்கள் இரு கொம்புகள். இவற்றை உடைய மும் மலங்களை அடக்கி ஆளவேண்டும்.

யாளி வாகனத் திருவீதி உலா முடித்து ரெங்கவிலாச மண்டபம் எதிரில் உள்ள நான்கு தூண்கள் உள்ள மண்டபத்தில் திருஷ்டி கழிப்பர். பின்பு ஆண்டாள் சந்நிதியில் ரெங்கநாதர் மாலை மாற்றிக்கொள்கிறார். இது முக்குணம் உடைய பிரக்ருதியை அடக்கி, ஆண்டவனுக்கு ஆண்டாளாகிய இலக்குமி, மாலை இடுகிறார் என்பதாகும். நினைத்தவை யாவும் கிடைக்கும் என்பது இதன் விளக்கமாகும்.

ஆளும் பல்லக்கு : யோக முறையில் உச்ச நிலை அடைந்தவர் தன் யோக வலிமையால் மனதை அலையவிடாது தன் ஆளுகைக்குள் கொண்டு வருகிறார். ஆகவே இதை ஆளும் பல்லக்கு எனவும் கூறுவர்.

ஸ்ரீ ரெங்கநாதருக்கு கூரநாராயணஜீயர் காலத்தில் சுமார் எண்ணூறு (800) ஆண்டுகளுக்கு முன் கொள்ளிடத்தில் (வட பெருங்காவிரி) தெப்பத்திருவிழா வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தபோது, ஓர் மந்திரவாதி தெப்பத்தை தன் அற்பத் தனத்தால் வெள்ளத்தில் அடித்துச் செல்லும்படி செய்தான். இதனை அறிந்த கூரநாராயணஜீயர் அவர்கள் தன் வலக்கை விரலில் அணிந்திருந்த தர்ப்பைப் புல்லால் செய்யப்பட்ட மோதிரத்தை வலது பக்கமாகத் திருப்ப தெப்பம் உரிய இடத்திற்கு வந்து சேர்ந்தது. பின்பு கூரநாராயணஜீயர் திருவரங்கம் கோயிலுக்கு மேற்கு திசையில் சுமார் பத்து ஏக்கர் நிலம் வாங்கித் தெப்பக்குளம் அமைத்தார்கள். அது முதல் மாசி மாதம் திருப்பள்ளி யோடம் என்ற பெயரில் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தில் எட்டாவது நாள் நடைபெறும் குதிரை வாகனத்திற்குப் பதிலாகத்தான் தெப்பத் திருவிழா கொண்டாடப்படுவதால் தெப்பத்திலும் குதிரை வாகனத்தைப் பக்கத்தில் அமர்த்தி வருகிறார்கள். ரெங்கநாதர் குதிரை வாகனத்தில் அமராது தெப்பத்தில் வருவது யோக நிலையில் முன்னேறியவரின் உடல் நிறை குறைந்து மிதக்க முடியும் என்பதை விளக்குகிறார்.

கற்பக விருக்ஷவாகனம் : கற்பகதரு வேண்டினார்க்கு வேண்டியதைக் கொடுக்கும் என்பர். யோக முறையில் இறைவனை வழிபட்டால் கற்பகதரு நமக்கு யாவற்றையும் அளிக்கும்.

மாதந்தோறும் பெருமாளுக்கும் தாயாருக்கும் நடைபெற்று வரும் திருவிழாக்களின் விபரம்.

| மாதம் | பெருமாளுக்கு நடைபெறும் திருவிழா | தாயாருக்கு நடைபெறும் திருவிழா |
|---|---|---|
| சித்திரை | பிர்ம்ம உற்சவம் | இல்லை |
| ,, | சித்ராபூர்ணிமை | ,, |
| ,, | கோடை உற்சவம் | உண்டு |
| வைகாசி | வசந்த உற்சவம் | ,, |
| ஆனி | பெரிய திருமஞ்சனம் | ,, |
| ஆடி | 18 or 28 தேதி உண்டு | இல்லை |
| ஆவணி | பவித்ர உற்சவம் | இல்லை |
| புரட்டாசி | இல்லை | நவராத்திரி |
| ஐப்பசி | ஊஞ்சல் உற்சவம் | உண்டு |
| கார்த்திகை | தீபஉற்சவம் | இல்லை |
| மார்கழி | திருவத்யயன உற்சவம் 21 நாட்கள் (வைகுண்ட ஏகாதசி திருவிழா) | 10 நாட்கள் |
| தை | பிரம்ம உற்சவம் | இல்லை |
| மாசி | தெப்ப உற்சவம் | இல்லை |
| பங்குனி | பங்குனி உற்சவம் | ,, |

தை, மாசி மாதத் திருவிழாவில் மட்டும் பெருமாள் உத்திர வீதி திரு உலா வருவார். மற்ற மாதத் திருவிழாக்களில் சித்திரை வீதியில் திரு உலா வருவார். மாசி மாதத் திருவிழா காலத்தில் கொடி ஏற்றம் நடைபெறுவதில்லை.

பெருமாள் திருவீதி உலா வரும்பொழுது சிம்மகதியில் புறப்படுகிறார். அதாவது பக்த சம்ரக்ஷணத்திற்கு கிளம்பும் பொழுது சிம்மம்போல் கிளம்புகிறார். பெருமாள் புறப்பாட்டைக் கண்டதும் பக்தர்கள் துன்பம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகுகின்றன. பக்தர்கள் துன்பம் தீர்ந்ததும் தன்னுடைய இருப்பிடத்திற்கு ஸர்ப்பகதியில் செல்கிறார்.

## மாதந்தோறும் பெருமாளுக்கு மட்டும் நடைபெறும் திருவிழாக்கள் விபரம்

### தை மாதம் நடைபெறும் திருவிழாக்கள்

தை மாதம் 1-ம் திருநாள் — கொடியேற்றம்

பகல்: கண்ணாடி அறை. மாலை: உபநாச்சியார்களுடன் புறப்பாடு. பெருமாள் மட்டும் யாகசாலை எழுந்தருளல் —அபிஷேகம். பெரியபெருமாள் முன்னிலையில் ரக்ஷாபந்தனம்

2-ம் திருநாள் — காலை ஒற்றைப் பிரபை. தாயார் சந்நிதி முன் மண்டபம். இரவு அன்ன வாகனம்

3-ம் திருநாள் — காலை சிம்ம வாகனம். சௌகார் மண்டபம் மாலை யாளி வாகனம்

4-ம் திருநாள் — காலை இரட்டைப் பிரபை. பல்லக்கில் வீரேஸ்வரம். இரவு கருடசேவை

5-ம் திருநாள் — காலை சேஷ வாகனம். ரங்கவிலாச மண்டபம் இரவு ஹனுமார் வாகனம்

6-ம் திருநாள் — காலை கற்பக விருக்ஷம். சுக்ரவாரத் தோப்பு இரவு யாளி வாகனம்

7-ம் திருநாள் — மாலை உபநாச்சியார்களுடன் புறப்பாடு. இரவு தாயார் சந்நிதி திருமஞ்சனம்

8-ம் திருநாள் — காலை பல்லக்கு ரங்கவிலாச மண்டபம். மாலை குதிரை வாகனம்

9-ம் திருநாள் — திருத்தேர். இரவு தாயார் சந்நிதியில் திருமஞ்சனம். அன்றிரவே தீர்த்தவாரி

10-ம் திருநாள் — காலை ஏகாதசி மண்டபம் திருமஞ்சனம். மாலை ஸப்தாவரணம் வீதி சுற்றிவந்து சக்கரத்தாழ்வார் பிரகாரம் வழியாக வந்து உடையவர் சந்நிதியில் கைத்தல சேவை

11-ம் திருநாள் — ஆளும் பல்லக்கு. ரங்கவிலாசம்

## மாசி மாதம் நடைபெறும் திருவிழாக்கள்

1-ம் திருநாள் — திருக்குறளப்பன் சந்நிதி. மாலை வாகன மண்டபத்தில் அம்ச வாகனம்.

2-ம் திருநாள் — பல்லக்கில் புறப்பாடு. நொச்சியம் மண்டபம். இரவு அவ்விடமிருந்து ஹனுமார் வாகனம்.

3-ம் திருநாள் — காலை பல்லக்கு. ஒட்டயம் ராமராயர் மண்டபம். மாலை அவ்விடமிருந்து கற்பக விருக்ஷம்.

4-ம் திருநாள் — காலை பல்லக்கு. காசிக்கரை செட்டியார் தோட்டம். மாலை அவ்விடமிருந்து கருட சேவை.

5-ம் திருநாள் — காலை பல்லக்கு. தாழக்குடி மண்டபம். மாலை அவ்விடமிருந்து இரட்டைப் பிரபை.

6-ம் திருநாள் — காலை பல்லக்கு. புளி மண்டபம். மாலை அவ்விடமிருந்து யானை வாகனம்.

7-ம் திருநாள் — மாலை உபய நாச்சியார் புறப்பாடு. பாதி வீதி வலம் வந்து தாயார் சந்நிதியில் திருவந்திக் காப்பு, நேராக மூலஸ்தானம் சேர்தல். தாயார் சந்நிதியில் திருமஞ்சனம் கிடையாது.

8-ம் திருநாள் — பிற்பகல் உபய நாச்சியார் புறப்பாடு. இரவு தெப்பம்.

9-ம் திருநாள் — காலை பல்லக்கில் புறப்பாடு. தெப்ப மண்டபத்தில் திருமஞ்சனம். இரவு ஒற்றைப் பிரபை. பந்தக் காட்சி. சித்திரை வீதி வலம் வருதல்.

## பங்குனி மாதம் நடைபெறும் திருவிழாக்கள்

1-ம் திருநாள் — காலை கருடக் கொடியேற்றம். மாலை உபய நாச்சியார் புறப்பாடு

2-ம் திருநாள் — காலை கருடமண்டபம். நேராக மூலஸ்தானம். வீதிஉலா இல்லை. இரவு 8 மணிக்கு ஜீயபுரம் புறப்பாடு

3-ம் திருநாள் — ஜீயபுரத்திலிருந்து திரும்புதல்

4-ம் திருநாள் — காலை பல்லக்கு. இரட்டை மண்டபம். இரவு அவ்விடமிருந்து கருட சேவை

5-ம் திருநாள் — காலை சேஷ வாகனம். சேஷ ராயர் மண்டபம். மாலை கற்பக விருக்ஷம்

6-ம் திருநாள் — விடியற்காலை 3 மணிக்குப் பல்லக்கில் உறையூர் புறப்பாடு. திரும்ப வரும்போது வெளி ஆண்டாள் சந்நிதியில் மாலை மாற்றல்.

7-ம் திருநாள் — மாலை உபயநாச்சியார் புறப்பாடு.

8-ம் திருநாள் — காலை பல்லக்கு. எல்லைக்கரை மண்டபம். இரவு குதிரை வாகனம்.

9-ம் திருநாள் — பங்குனி உத்திரம் சித்திரை வீதி, உத்திர வீதிகளில் உலா வந்து பெருமாள் தாயார் சந்நிதி அடைதல்.

10-ம் திருநாள் — கோரதம், ஏகாதசி மண்டப திருமஞ்சனம். மாலை திருவீதி புறப்பாடு. தாயார் சந்நிதியில் திருவந்திக் காப்பு – உடையவர் சந்நிதியில் கைத்தல சேவை. கொடி இறக்குதல்.

11-ம் திருநாள் – காலை கருடமண்டபம். இரவு ஆளும் பல்லக்கு.

### சித்திரை மாதம் நடைபெறும் திருவிழாக்கள்

1-ம் திருநாள் — காலை கொடியேற்றம். மாலையில் உபயநாச்சியார் புறப்பாடு. பெருமாள் யாகசாலை திருமஞ்சனம்.

2-ம் திருநாள் — காலை பல்லக்கு. கொடியாலம் சேஷாத்திரி அய்யங்கார் மண்டபம். மாலை கற்பக விருக்ஷம்.

3-ம் திருநாள் — காலை சிம்மவாகனம். சௌகார் மண்டபம் (கழுதை மண்டபம்) இரவு அவ்விடமிருந்து யாளி வாகனம்.

4-ம் திருநாள் — காலை இரட்டைப் பிரபை. மேலூர் கோமுட்டி செட்டியார் மண்டபம். இரவு அவ்விடமிருந்து கருட சேவை.

5-ம் திருநாள் — காலை சேஷ வாகனம். பட்டு நூல்கார மண்டபம். மாலை அவ்விடமிருந்து ஹனுமார் வாகனம்.

6-ம் திருநாள் — காலை ஹம்ச வாகனம். நாகப்பிள்ளை மண்டபம். இரவு யானை வாகனம். உள் ஆண்டாள் சந்நிதியில் மாலை மாற்றுதல்.

7-ம் திருநாள் — மாலை உபய நாச்சியார்களுடன் புறப்பாடு. இரவு தாயார் சந்நிதியில் திருமஞ்சனம்.

8-ம் திருநாள் — காலை வண்டலூர் சப்பரம் (வெள்ளிக் குதிரையில்) ரெங்க விலாச மண்டபம். இரவு தங்கக் குதிரையில் வையாளி.

9-ம் திருநாள் — திருத்தேர். இரவு ரேவதி மண்டபத்தில் திருமஞ்சனம்.

10-ம் திருநாள் — மாலை ஸப்தாவரணம் புறப்பாடு. திருவீதி வலம் வருதல். சக்கரத்தாழ்வார் சந்நிதி வழியாகச் சென்று உடையவர் சந்நிதியில் கைத்தல சேவை. மூலஸ்தானம் அடைதல்.

11-ம் திருநாள் — ரெங்க விலாச மண்டபம். இரவு ஆளும் பல்லக்கு.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே ஸ்ரீரங்கம், புனல ரங்கம், சிரரங்கம், தண்ணரங்கம், மதிளரங்கம், ஒளியரங்கம், அணியரங்கம், திருவரங்கம் என பல பெயர்களில் புகழ் பெற்றிருந்தது.

கோயிலின் மொத்த பரப்பளவு 156 ஏக்கராகும்.

திருவரங்கம் குழலூதும் பிள்ளை கோயில் கோபுரம் ஹொய்சாலர் கலைச் செல்வமாகும்.

திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீ ராமானுஜர் அவர்கள் இரண்டு வருடங்கள் திருவரங்கம் சமீபம் உள்ள திருவெள்ளரையில் வாழ்ந்தார். அப்போது கோயில் வழிபாட்டு முறைகளை ஒழுங்குசெய்து "பத்துக் கொத்து" வகுத்தார். ஸ்ரீரங்கத்துக்கு முறையான வழிபாட்டு முறை, விழா முறை அமைத்தார்.

விஸ்வரூப தர்சனம் என்பது பரமாத்மா எதிரில் ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்கள் அடங்கிய ஜீவாத்ம சொரூபத்தைக் குறிப்பது தான்.

விஸ்வரூபத்தின் போது பசுவின் பின் புறம் உள்ள யோனி காண்பிக்கப்படுகிறது. இதன் தத்துவம் மாட்டிடையன் ஆகிய ஆசாரியன் வாலாகிய ஆசா பாசங்களை நீக்கி யோனியாகிய சுழிமுனை மூலம் ஜீவன் பகவானை அடைவதைக் குறிக்கும்.

யானையை நிறுத்தி வைத்து பிளிறச் செய்வார்கள். அதன் தத்துவம் பாகனாகிய ஆசாரியன் யோகமாகிற அங்குசத்தால் ஜீவனாகிய யானைக்கு பரமாத்ம சொரூபத்தைக் காட்டுவதைக் குறிக்கும். பகவத் தரிசனம் கிடைத்த சந்தோஷத்தால் யானை பிளிறிகிறது. ஜீவனுக்கு மேளதாள சத்தங்கள் கேட்கும்.

குதிரையை நிறுத்தி வைத்தல் என்பது ஆசாரியனாகிய குதிரைப் பாகன் கடிவாளம் என்கிற பிராணாயாமத்தால் குதிரையாகிய பிராணனை சுழி முனையில் செலுத்துவதைக் குறிக்கும்.

கன்னிப் பெண்ணை நிறுத்தி வைத்தல் :—

கன்னிப் பெண் கையில் விளக்கு வைத்திருப்பது வழக்கம். ஆக இது குண்டலினி சக்தியால் சோதி வடிவான பரம் பொருளைக் காட்டுவதாகும்.

தற்சமயம் குதிரை—கன்னி விஸ்வ ரூபத்தில் வருவது இல்லை. வழக்கு ஒழிந்தது.

---

திருவரங்க ராஜாவான ரெங்கராஜனை உத்சவ நாளன்று சேவிக்க இயலாவிட்டால் மறு வருடம் அந்த உத்சவத்தின் திருக்கோலத்தை அந்த குறிப்பிட்ட நாளில்தான் சேவிக்க இயலும். இதற்கு உதாரணம் விஜயரங்க சொக்கநாத ராஜா கைசிக ஏகாதசி படியேத்த சேவை சேவிக்க வந்து இயலாமல் ஒரு வருடம் காத்திருந்து சேவித்ததே சாட்சியாகும்.

# யோகத்தின் ஆரம்பநிலை

அஜபா காயத்ரி, பிராணயாமம், வாசியோகம் பேசாத மந்திரம், ஔவையார் விநயகர் அகவல், ராமலிங்க சுவாமிகள் கையரவில்லாது நடுகண் புருவப்பூட்டு, சித்தர் பாடல்கள் இவைகளை தினசரி மூன்று முறை ஒரு வேளைக்கு முப்பது நிமிடங்கள் வீதம் அப்பியாசம் செய்யவேண்டும்.

முதலில் ரோமத்துவாரம் வழியே கெட்டநீர், வேர்வை வெளியேறும். இரண்டாவதாக வாதம் பித்தம் சிலோத்துமம் வெளியேறும். மூன்றுவதாக பழைய கெட்ட இரத்தம், மலம் மூலம் வெளியேறும். நான்காவதாகத் தோல் உரியும். ஐந்தாவதாக தேகம் பொன்நிறமாக மாறும். ஆறுவதாக சுழி முனை வாசல் திறக்கும். தூர திருஷ்டி தெரியும். மேலும் திரிகாலமும் அறியலாம். ஏழாவதாக தேகம் தீபம் போல் பிரகாசமாய் இருக்கும். பின் உடல் எடை குறைந்து லேசாக காற்று போலிருக்கும். அப்பியாசம் செய்யும் போது முகத்தில் எறும்பு ஊர்வது போல் இருக்கும். காது, மூக்கு, உடலில் அறிப்பு ஏற்படும். கபம் நொங்கு போல் வேளியேறும். புருவ மத்தியில் பிரம்மரந்திரத்தில் ஓர் உணர்வு ஏற்படும். இவ் உணர்வு சில சமயங்களில் மட்டுமே ஏற்படும். தொடர்ந்து எப்போதும் ஏற்படாது. தொர்டர்ந்து இவ்வுணர்வுடன் இருக்க நாம் அப்பியாச முயற்சியில்தான் முன்னேறவேண்டும். வாத்திய ஒலி, கடல் அலை, புயல், சுழல் காற்று, பெரிய தொழிற்சாலை ஒலி போன்று ஆரம்பத்தில் காதில் கேட்கும். பின் சப்தம் சிறியதாகக் கேட்கும். சங்கு, வீணை, மத்தளம், வண்டு, சிறியகுருவிகள் எழுப்பும் சப்தம் கேட்கும். சூட்சம நாதத்தில் மனதைச் செலுத்தாது சூட்சம நாதத்திலிருந்து மேல் நிலைக்குச் செல்லத் தொடர்ந்து அப்பியாசம் செய்யவேண்டும். ஆறு ஆதார நிலையையும் நம் உடலில் காண முடியும். துர் நாற்றம் நம் உடலில் இருக்காது.

நம் உடலில் உள்ள கபத்தை நீக்கவேண்டும். உடலில் உள்ள கபம் தான் நமக்கு எமன். இக்கபம் என்ற – பூட்டை அப்பியாசம் என்ற சாவியால் திறக்க வேண்டும். இதைத்தான் ஏசு பெருமான் கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் எனக் கூறினார். அஜபாகாயத்ரி என்பது கேட்பது.

தட்டுங்கள் திறக்கப்படும் என்பது சுழி முனை நாடியை பிராணா யாமத்தால் திறப்பது. கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதன் பொருள் : அறியாமை மலத்தை நீக்கி, அறிவு என்னும் ஒளிகொள் விளக்கை ஏற்றிவைத்து கவினுறு மனத்தை சமைத்திடும் சிற்பி யாம் ஆசானிடம் சென்றுகேட்டால் அவ்வாசான் பிரம்மத்தை அடைய வழியான பிரம்மரந்திரத்தைத் திறக்கும் வித்தையைக் கொடுப்பான் அவ்வாசானின் திருவடிப்பதுமங்களை நீங்காது நிழல் போல் இருந்து மேன்மேலும் விளக்கம் கேட்டால் அறியாமைக் கதவை நீக்கி அறிவென்னும் ஒளிமயமான பிரம்மத்தை காட்டித் தருவான்.

சுழி முனை நாடி என்பது புருவமத்தி. புருவ மத்தியில் அக்னி மண்டலம் சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகியன உள்ளன. இவைகளைத் தாண்டி மேல் நிலைக்குச் சென்றால் பிரம்மரந்திரத்தை அடையலாம். பிரம்மரந்திரம் என்பது தலையின் உச்சிப் பகுதியாகும். உடலில் உள்ள கபத்தை மூலா தாரத்தில் உள்ள யோகாக்கினியால் எரித்து வெளியேற்ற வேண்டும். கண்களுக்கு மத்தி, நெற்றியின் அடி, மூக்கினடி, இருபுருவ மத்தி, ஊசி முனை வழியே வாசியை மேலேற்ற வேண்டும், அப்பியாசம் மூலம் முதுகின் மத்தியில் பிடரிக்குக் கீழ் சுழி முனை நாடியில் முதுகில் ஊசி முனை அளவு பனிக்கட்டி வைப்பது போன்ற உணர்வு ஏற்படும். பிடரியிலும் உணர்வு ஏற்படும். தலை உச்சியில் தாமரைப் பூ பூத்து அதன் இதழ்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக சிரசில் குத்துவது போன்ற உணர்வு ஏற்படும்.

தலையின் மேல் பன்னிரண்டு ராசிகளின் இடத்தைக் காண முடியும். இந்நிலையில் தூக்கம் வராது. எந்நேரமும் உணர்வோடு தூங்க முடியும். இந்த தூல உடம்பிற்குத்தான் ஓய்வு தேவை. சூட்சம உடம்பு எப்போதும் உணர்வோடு இருக்கும், இதை யோக முறையில் அப்பியாசம் மூலம்தான் அறிய முடியும், ஒரு வேளை யோகிகள் உலக விவகாரத்தில் ஈடுபட்டால் முப்பது நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரம் ஓய்வு எடுத்தால் போதும். அப்போதும் உணர்வோடுதான் தூங்குவர்.

பிரம்மந்திரம், பிடரி, மார்பின் பள்ளம் இவைகளை நாம் கண்டு அனுபவித்தாலும் அதை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு

அதை அப்பியாசத்தின் முதிர்ச்சியால் யோகிகள் வர இயலாது. எந்நேரமும் கொண்டுவர முடியும். அப்படிக் கொண்டுவந்தபின் அந்த சுழிமுனையின் உணர்விலேயே நம் மனது இருக்குமானால் வெளி உலக விவகாரத் தொடர்பு அற்றுப்போகும். தன் சொந்த உடல் உணர்வுகூட இருக்காது. இந்நிலையே ஆனந்தநிலை சமாதி நிலை எனப்படும்.

ஞான இந்திரியங்களுடன் பிராணன் எதுவரை சேர்ந்து இருக்கிறதோ அதுவரை சமாதிநிலை கிடைக்காது. பிராணன் இந்திரியங்களை கடந்து பிரம்ம நிலையில் போய் பிரம்மத்துடன் ஐக்கியமானால்தான் சமாதிநிலை கிடைக்கும். இதுவரை அன்னமய கோசம். இந்த நிலை வந்ததும் நிர்வாணநிலை ஏற்படும். இந்த நிலையை அடைந்தவர்க்கு அன்னம், நீர் தேவை இல்லாத நிலை ஏற்படும்.

இதற்குமேல் பிராணமயகோசம். இந்த நிலை அடைந்தால் இரவு பகல் வித்தியாசம் அவர்களுக்குக் கிடையாது. இரவும் பகலும் ஒன்றாகவே இருக்கும். இந்நிலை அடைந்தால் பிராணனும் ஜீவனும் ஐக்கியமாகிவிடுகின்றன. ஆனால் இந்திரியங்கள் வேலை செய்யாது. இந்நிலையில் சூட்சம சரீரம் சித்தியாகும். இந்த தூல உடலிலிருந்து சூட்சம உடலைப் பிரித்துக்காட்ட முடியும்.

தலை உச்சியில் பிரம்மரந்திரத்தில் ஒரு சூடு உண்டாகும். அது இருக்க இருக்க அதிகமாகும். அதன்பின் மலத்தில் கபம் வெளியேறும். ஒரு வருடம் முடிந்ததும் இரவு ஒருநாள் முழுதும் தூக்கம் வராது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் ஒரே வலியாக இருக்கும். தாகம் அதிகமாக இருக்கும். ஒரு மணிக்கு ஒரு முறை ஒரு குவளை நீர் குடிக்கவேண்டி இருக்கும். காலை நான்கு மணிக்கு மலம் வருவது போன்று கபம் நிறைய மலத்தில் வெளியேறும். கபம் நீங்கியதும் உடல் வலி இருக்காது. கபம் வெளியேறிய அன்று மட்டும் ஒரு நாள் காய்ச்சல் இருக்கும். மருந்து உண்ண வேண்டியதில்லை. ஓய்வு எடுத்துக்கொண்டால் போதும். அன்று மாலை யோகாப்பியாசம் செய்தால் அன்றிரவு நன்கு தூக்கம் வரும். இந்த உடல் வலியைத்தான் சித்தர்கள் பிரசவ வேதனை எனக் கூறினார்கள். இப் பிரசவ வேதனை ஒன்று அல்லது இரண்டு மணி நேரம்தான் இருக்கும். பயப்படத் தேவை யில்லை. இக்கபம் மலத்தில் வெளியேறும் காலம் முழு...

முழுதும் சூடாக இருக்கும். இந்த நேரத்தில் சுவாசம் மணிபூரகத்திலிருந்து அநாகதம் வரும். விசுத்தி வந்ததும் இன்னும் பல வேலைகள் செய்யும். உள்ளுடம்பில் சூடு இருக்கும். எப்படிப்பட்ட கடுமையான ஆகாரம் உண்டாலும் ஜீரணமாகி விடும். கோடை வெய்யிலில் வெளியில் சூரிய வெளிச்சம் உடலில் படும்படி சென்று வந்ததும் உடலைத் தொட்டுப் பார்த்தால் பனிக் கட்டியை வைத்தது போன்று இருக்கும். பின் ஒவ்வொரு பகுதியாக சூடு ஏற்படுவதை உணர முடியும். உடலின் அவயவங் களிலிருந்து சூடு வெளியேறுவதை உணர முடியும்.

பல்வலி, பல் கூச்சம் ஏற்படும். இச் சூட்டால் சில இடங்களில் வெந்து புண்ணாகும். பயப்பட வேண்டியதில்லை. அதிகம் பேசவும் முடியாது. அதிகம் பேசினால் சூடு உண்டாகும். இருமல் ஏற்படும் தானே மௌன நிலைக்குக் கொண்டு செல்லும். இந்நிலையில் மன இந்திரியங்கள் தானே தன் நிலை இழந்து சாந்த சொரூபியாக நிற்கும். இந்நிலையில் ஆகாரத்தில் உப்பு, புளி, காரம் போன்ற ருசி தேவையில்லை. எதையும் சாப்பிட முடியும். உள்ளுடலை இவ் உஷ்ணமே சுத்தம் செய்துகொள்ளும். அடிக்கடி மலம் வெளி யேறும். மார்பு பள்ளத்தில் ஓர் உணர்வு தெரியும் அந்நேரம் கடினமாக இருக்கும். இந்தநேரம் சதா வயிற்றில் சப்தம்கேட்கும். இந்நிலையில் நடக்கும்போது மிக முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கால் பின்னும் பிரளுவதால் கால் சுளுக்கு ஏற்படும். உடல் முழுதும் உஷ்ணம் ஏற்பட்டதும் அமிர்தம் இறங்கும். ஆனால் அமிர்தம் இறங்கும் இடத்தைவிட்டு மனம் அசையாமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அமிர்தம் கிடைக்கும். அசைவு சிறிதளவு ஏற்பட்டாலும் அமிர்தம் கிடைக்காது. ஒவ்வொரு சொட்டாகத்தான் அமிர்தம் கிடைக் கும். மீண்டும் அந்த இடத்தில் மனதைக் கொண்டுவந்து நிறுத்தினால் தொடர்ந்து சொட்டு சொட்டாக அமிர்தம் கிடைக்கும்.

ஸ்ரீரங்கம் கோயில் ஸ்தல விருட்சம் புன்னை ஆகும். திரு. அரங்கநாதர் பாற்கடல் யோக சயனத்தின் அமைப்பில் காவிரி நீர் சூழ் அரங்கநகரில் அமர்ந்துள்ளார்.

காவிரி குளிர் தரும் ஆறு. கடல் உப்பு நீர் கொண்டது. காவிரி பொன்னி என அழைக்கப்படுகிறது. பொன் சத்துக்கொண்டது. ஆழ மூழ்குவார்க்கும் கரையினில் உலாவுவார்க்கும் மிகுந்த குளிர்ச்சியைத் தருவது.

**புன்னை நெய்:** சன்னி இசுவு, ஐவகை வலி விரணம், கிருமி ஆகியவற்றை நீக்கும். புன்னைப்பூ—நீங்கா மேக வியாதி, சித்தப்பிரமம், கரப்பான், சொறி சிரங்கு இவற்றை நீக்கும். புன்னைக்கொட்டை—செவிப் புண், சன்னி, வாதம், சூதக வாய்வு, சீதள வாய்வு இவற்றை நீக்கும் என மருத்துவ நூல் கூறும். ஆக காவிரியில் நீராடி புன்னை விருட்சத்தை வலம் வந்து, சந்திர புஷ்கரிணியில் நீராடி, மருத்துவ இறையாம் தன்வந்தரியை வணங்கி அரங்கனை வழிபட்டால் வியாதிகள், வினைகள் நீங்கப்பெற்று உள்ளம் தூயராய் சந்திரமண்டல வழியே இறைவனது பாத கமலங்களைக் கிட்டப்பெறுவர் என தத்துவம் தெளிவாகும்.

அமைப்பும் அவ்வாறே உள்ளது காவிரி. காவிரியிலிருந்து வந்தவுடன் தன்வந்தரி. தன்வந்தரியின் கண் பார்வையில் புன்னையும், புஷ்கரிணியும். பின்பு வலமாகச் சென்றால் அரங்கன் ஆலயம்.